# Commonwealth Respite and Carelink Centre
## Inner West

Tamil

உள்மேற்குப் பகுதியிலுள்ள காமன்வெல்த் ரெஸ்பைட் மற்றும் பராமரிப்பு இணைப்பு மையம்:

- ஆ்'பீல்டு, பர்வுட், கனடா பே, கேன்டர்பரி, லைக்கர்ட், மெரிக்வில் மற்றும் ஸ்ட்ரத்பீல்டு உள்;ர் அரசு வட்டாரங்களில் கிடைக்கக்கூடிய சமுதாய ஆதரவுச் சேவைகளைப் பற்றிய இலவசத் தகவல்கள் பெற மற்றும் பரிந்துரைகள் தர
- பராமரிப்பாளர்களுக்காக அவசர மற்றும் குறைந்தகால ரெஸ்பைட் ஏற்பாடுகள் செய்ய

ஒரு முக்கியமான இணைப்பாக விளங்குகிறது.

## பராமரிப்பாளர் என்பவர் யார்?

பராமரிப்பாளர் என்பவர் நலிந்த வயதுடைய ஒருவருக்கோ, ஊனமுற்ற, தீராத வியாதி கொண்ட அல்லது மனநோய் உள்ள ஒருவருக்கோ தொடர்ந்த, அரவணைக்கும் பராமரிப்பு வழங்கும் ஒரு குடும்ப அங்கத்தினர், நண்பர் அல்லது அண்டை வீட்டுக்காரராகும்.

## ரெஸ்பைட் என்றால் என்ன?

ரெஸ்பைட் என்பது குறைந்தகாலப் பராமரிப்பாகும். அது பரமரிப்பாளர்களுக்கு தங்களுடைய பராமரிக்கும் பணிக்கிடையே சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ள அனுமதிக்கிறது. ரெஸ்பைட் என்பது சிலமணி நேரங்கள் வீட்டில் இருப்பதோ, பராமரிப்பகத்தில் என்றால் பகலில் வெளியே செல்வது, இரவில் தங்கிவிடுவது அல்லது அதிக நேரம் இருப்பதோ ஆகும். அத்துடன் பராமரிப்பாளர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாலோ அல்லது உடல் நலமில்லாமல் போனாலோ, அவசரகாலங்களில் பராமரிப்பை வழங்குவதும் ரெஸ்பைட்டின் பொருளாகும்.

## ரெஸ்பைட் யாருக்குக் கிடைக்கும்?

ரெஸ்பைட்டுக்கான தகுதியுள்ளதாவென பராமரிப்பாளர்கள் மதிப்பீடு செய்யப்படுவதுடன், ஒவ்வொருவரின் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டனவாவென உறுதிப்படுத்திக் கொள்ளப்படுகிறார்கள். அடுத்த பக்கத்தில் பட்டியலிடப்பட்டிருக்கும் குறிப்பிட்ட இலக்குப் பிரிவுகளுக்குச் சேவை செய்வதற்காகக் காமன்வெல்த் ரெஸ்பைட் மற்றும் பராமரிப்பு இணைப்பு மையத்துக்கு நிதி வழங்கப்படுகிறது.

- நலிந்த வயதானோரைப் பராமரிப்பவர்கள்
- டிமென்ஷியா எனப்படும் நினைவுப் பிறழ்ச்சி நோயினால் பாதிக்கப்பட்டோரைப் பராமரிப்பவர்கள்
- இறுதி நிலை பாலியேடிவ் பராமரிப்புத் தேவைகளுள்ளோரைப் பராமரிப்பவர்கள்
- ஊனமுற்றோரைப் பராமரிப்பவர்கள்
- வயதானோரைப் பராமரிப்பவர்கள்
- மனநோய் உள்ளோரைப் பராமரிப்பவர்கள்
- மனவளர்ச்சி குன்றியோரைப் பராமரிப்பவர்கள்
- அறிவு வளர்ச்சி குன்றியோரைப் பராமரிப்பவர்கள்
- 25 வயதுக்குட்பட்ட இளவயதுப் பராமரிப்பவர்கள்
- பழங்குடியினர் மற்றும் டோரஸ் வளைகுடா தீவுக்குடியினர் பராமரிப்பவர்கள்
- மாறுபட்ட கலாசார மற்றும் மொழிப் பின்னணி கொண்ட (CALD) பராமரிப்பவர்கள்

## நான் மையத்தை அணுகுவது எப்படி?

மேல் விவரங்களுக்கும், ரெஸ்பைட்டுக்கும் இலவச இணைப்புத் தொலைபேசியில் அழையுங்கள்

FREECALL™
**1800 052 222***

*கைத்தொலைபேசியின் அழைப்புகளுக்குப் பொருத்தமான தொகையில் கட்டணம் வசூலிக்கப்படும்

அவசரகால ரெஸ்பைட்களும், வேலைநேரம் தாண்டிய வேளைகளில் இந்த எண்ணின் மூலம் தொடர்புகொள்ள முடியும்

எங்களைத் தொடர்பு கொள்ள உங்களுக்கு ஒரு மொழிபெயர்த்துரைப்பாளர் தேவைப்பட்டால், மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்புச் சேவையை 131 450 என்ற எண்ணில் தொலைபேசியில் அழையுங்கள்

கீழ்க்காணும் இடத்தில் அமைந்திருக்கும் எங்கள் தொழிலகத்துக்கு வந்து பாருங்கள்:

**44 லிவர்பூல் சாலை**
**சம்மர் ஹில், நியூ சவுத் வேல்ஸ் 2130**
**அலுவலக நேரம்: காலை 9.00 – மாலை 4.30**
**திங்கள் முதல் வெள்ளி வரை**

மேலதிக விவரங்களுக்குப் பின்வரும் இணையதளத்துக்குச் செல்லுங்கள்:

For more information visit: www.wesleymission.org.au/crcc

Commonwealth Respite and Carelink Centre is an activity of Wesley Mission

An Australian Government Initiative